முருகப்பெருமான் துணை

**மகான் நமிநந்தியடிகள் நாயனார் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

15.03.2023, புதன்கிழமை

1. ஞான வள்ளலே தவராஜனே
ஞானிகளை படைக்க வந்த
ஞானபண்டிதன் அவதார அரங்கனே
ஞாலமதில் உன் பெருமை கூறி
2. கூறியே சுபகிருது சேல் திங்கள்
குறைவிலா ஏகதிகதி புந்திவாரம்
(சுபகிருது வருடம் பங்குனி மாதம் முதல் நாள், 15.03.2023, புதன்கிழமை)
தெரிவிப்பேன் அனுகூல ஆசி
தேசிகனுக்கு நமிநந்தியடிகள் யானும்
3. யானுரைக்க உலகநலம் காண
உண்மைவழி அரங்கன் வழி
ஞானவான்கட்கு கடைத்தேற்றியே
நம்பிக்கை வளர்க்கும் உயர் வழி
4. வழிகள்தனை ஏற்று நன்கு
வழிமொழிந்து பின்தொடர
அழியாமை சக்தி பெற்றுமே
அவரவரும் உயருவது உறுதி
5. உறுதி தந்து காக்கும் ஞானி
உலகமாற்றம் செய்யவே
ஆறுமுகனாரின் சூட்சுமபலமாக
அவதாரம் நிகழ்த்தி இருக்க
6. இருக்கவே அனுகித் தொடர்ந்து
இடைவிடா தொண்டிலிருப்பவர்க்கு
கருத்தாக சூட்சும வடிவில்
கந்த வேலன் காட்சி கிட்டும்
7. கிட்டும் அரங்கனின் மகிமையாக
கிட்டும் அரங்கனின் சொரூபமாக
கிட்டும் அன்னதான பலமாக
கிட்டும் சன்மார்க்க வேதமாக
8. ஆகவே சூட்சுமம் விளங்கி
அவரவரின் சரணாகதி பெருகி
வகைபட வளர்ச்சி மாற்றம்
வாழும் வாழ்வின் பலம்புரிந்து
9. புரிந்துமே புண்ணிய வழிதேடி
புகழ்தரும் தருமத்தில் உதவி
அறிந்தும் அறியாமலும் செய்த
அனைத்து வினைகளும் அகன்றிட

10. அகன்றிட ஆற்றல் பெருகி
அறத்தால் அரங்கன் ஆசியால்
மகத்துவமிக்க தீட்சை பலத்தால்
மக்களெல்லாம் மாறுவர் தேறுவர்

11. தேறியே ஞான ஆட்சியை
தேசமெங்கிலும் படைத்துமே
அறியாமை விரட்டித் தெளிவர்
அழியாமை பெற்று உயர்வர்
அனுகூல ஆசி முற்றே

–சுபம்–